


# ஆகஸ்ட் 18
# புனித எலேனா
# (250 – 330)

மகா கொன்ஸ்தாந்தின் மன்னனுடைய தாயான இவள் ஆசியா நாட்டில் பிறந்ததாகச் சொல்லப்படுகிறது. இவளுடைய கணவன் பெயர் கொன்ஸ்தான்சியுஸ். இவர் உரோமை இராணுவத்தில் வேலை பார்த்து வந்தார். 20 ஆண்டுகளுக்குப்பின் அவர் மேற்கத்திய நாட்டின் பேரரசரானார். அரசியல் காரணத்திற்காக மனைவியை விவாகரத்து செய்தார். இவர்களுடைய ஏகமனதாக கொன்ஸ்தாந்தின், தாய்க்கு பிரமாணிக்கமுள்ளவராக இருந்தார். அரச அரியணையில் ஏறியதும், தாய்க்கு அரசிக்குரிய வந்தனைகள் செலுத்தும்படிச் செய்தார்.

313-ஆம் ஆண்டு இவர் போரில் வெற்றி பெற்றார். உடனே இவருடைய தாயும் கிறிஸ்தவள் ஆனாள். உத்தம கிறிஸ்தவ வாழ்வு நடத்தலானாள். கிறிஸ்தவ மறை எங்கும் பரவ உதவி புரிந்தாள். ஐரோப்பாவில் பல கோவில்களைக் கட்டினாள். 75-ஆம் வயதில் பாலஸ்தீனா புண்ணிய பூமிக்கு பிரயாணம் செய்தாள். இயேசு பிறந்த இடத்தில் ஒரு கோவிலும், அருகில் இயேசு பரலோகத்திற்கு எழுந்தருளிய இடத்தில் ஒரு கோயிலும் கட்டினாள். உரோமையில் தன் அரண்மனையை ஒரு கோவிலாக மாற்றினாள். அங்கு இன்றும் திருச்சிலுவையின் புனித பண்டம் ஒன்றும், பிலாத்து சிலுவையில் எழுதி வைத்த சொற்களும் வைக்கப்பட்டிருக்கின்றன.

சிந்தனை: இலவசமாய் பெற்றுக் கொண்டீர்கள்ளூ இலவசமாய்க் கொடுங்கள்.

செபம்: ஓ சிலுவையே, எங்கள் ஏக நம்பிக்கையே வாழ்க.